# நாம் நமது இரட்சகராகிய இயேசுவின் பிறப்பைக் கொண்டாடுகிறோம்

**ஜெபம்:** "பரலோகத்தில் இருக்கும் எங்கள் அன்பான பிதாவே, நீர் எங்களுக்குக் கொடுத்துள்ள மாபெரும், மிகுந்த நேசிக்கத் தகுந்த பரிசாகிய உமது குமாரனை போற்ற இந்தப் பாடத்தின் மூலமாக சிறுவர்களுக்கு உதவ வேண்டும்."


உங்கள் திட்டங்களுக்கும், பழக்கவழக்கங்களுக்கும் ஏற்ற பாடத்தைத் தெரிந்து கொள்ளுக.

## 1. இயேசுவின் பிறப்பைப் பற்றிய பாடல்களைப் பாடவும்.

சில விசுவாசிகள் தங்கள் நண்பர்களின் வீடுகளின் முன்னால் கிறிஸ்துமஸ் காலங்களில் பாடல்கள் பாடுகின்றனர்.

## 2. இந்த முன்னணையின் படத்தைப் பார்த்து வரையவும் அல்லது வண்ணம் தீட்டவும்.

- இயேசுவின் முதல் படுக்கை ஒரு முன்னணை. ஆடமாடுகள் தின்னும் வைக்கோல் போடும் பெட்டி.



- கிறிஸ்துமஸ் கொண்டாட்டங்களின் போது பிள்ளைகள் இந்தப் படங்களைப் பெரியவர்களுக்குக் காட்டவும்.
- இயேசு எவ்வாறு ஓர் எளிமையான இடத்தில் பிறந்தார் என்பதை முன்னணை நமக்குக் காட்டுவதை பிள்ளைகள் பெரியவர்களுக்கு விவரிக்கவும். மக்கள் இன்னும் அவரை தேவ குமாரன் என்று அங்கீகரிக்கவில்லை.

## 3. லூக்.1:26-38, 2:1-20 உள்ள இயேசுவின் பிறப்பின் கதையை சிறுவர்களுக்குக் கூறவும்.

- தேவ குமாரனாகிய இயேசுவின் கதையினை ஒரு பெரியபிள்ளை அல்லது ஆசிரியர் வாசிக்கவும்.
- தேவ குமாரன் மனிதனாகப் பிறந்தபோது, அரண்மனையில் அல்ல மிருகங்கள் கட்டும் இடத்திலேயே பிறந்தார் என்பதை விளக்கவும்.

**கேள்விகள்:** கதையைக் கூறியபின், இந்தக் கேள்விகளையும் கேட்கவும். *கேள்வியைத் தொடர்ந்து பதில் வருகிறது.*

a) தேவ தூதனைப் பார்த்த மரியாள் எவ்வாறு உணர்ந்தாள்? *(லூக்.1:29).*

b) இயேசுவைப் பற்றி தேவதூதன் அளித்த வாக்குத்தத்தம் என்ன? *(1:32-33).*

c) *(லூக்.1:38).*

d) மரியாளும் யோசேப்பும் ஏன் பெத்லகேமுக்கு போக வேண்டியதாயிற்று? *(2:1-3: குடி மதிப்பு எழுதும் படி ரோமப் பேரரசன் சொந்த ஊருக்கு போகுமாறு மக்களுக்கு கட்டளை இட்டான்).*

e) புதிதாகப் பிறந்த குழந்தையை மரியாள் எங்கு கிடத்தினாள்? *(2:7).*

f) அந்த இரவில் ஆயர்கள் ஏன் அச்சம் அடைந்தனர்? *(2:8-10).*

g) குழந்தை இயேசு யார் என்று ஆயர்கள் எப்படி கண்டு பிடிப்பார்கள்? *(2:11-12).*

h) இயேசுவைப் பார்த்தபின் ஆயர்கள் என்ன செய்தனர்? *(2:20).*

## 4) பெரியவர்களுக்காக சிறுவர்கள் இயேசுவின் பிறப்பை நாடகமாக்கட்டும்.

சபைத்தலைவரோடு பேசி நாடகத்தை அரங்கேற்ற ஏற்பாடு செய்யவும். முடியுமானால் சில வாரங்களுக்கு முன்னதாகவே ஒத்திகையை ஆரம்பிக்கவும்.

- நேரம் குறைவாக இருந்தால், முக்கியம் இல்லாத பகுதிகளை விட்டுவிடவும்.
- சிறுவர்கள் குறைந்த எண்ணிக்கையில் இருந்தால், பெரியவர்களையோ, அல்லது அக்கம்பக்கத்து சிறுவர்களையோ (எளிய பாத்திரம்) நடிக்க வைக்கலாம்.
- சூழ்நிலைக்கும் பழக்கவழக்கங்களுக்கும் ஏற்ப விஷயங்களைக் கூட்டவோ குறைக்கவோ செய்யலாம்.

**ஆசிரியர்களுக்கும், பெரியபிள்ளைகளுக்கும்: (ஆயத்தப்படுத்துதல்)**

- **கதைகூறுபவர்:** கதை சுருக்கத்தை கூறி ஒத்திகை பார்க்கவும். பிள்ளைகள் பேச வேண்டியதையும் நடிக்க வேண்டியதையும் ஞாபகப் படுத்தவும்.
- **மரியாளும் யோசேப்பும்:** மரியாள் ஒரு பொம்மையை இயேசுவாக துணியில் சுற்றி வைக்கவும்.
- **காபிரியேல் தூதன்:** வெள்ளை அங்கியை முடியுமானால் அணியவும். (ஒரு வெள்ளைப் போர்வை போதுமானது).

**சிறியபிள்ளைகள்** : தயாரிப்பு

- சத்திரக்காரன், தொழுவத்தில் இருக்கும் மாடுகள், ஆயர்கள், ஆடுகள்.
- ஆயர்கள் தடியை வைத்துக்கொள்ளவும். (நீண்ட தடிகள்).
- ஒரு பெட்டியில் துணி அல்லது வைக்கோல் போட்டு முன்னணையாக வைக்கவும்.

### முதல் பகுதி (மரியாளும் தேவ தூதன் காபிரியேலும்)

**கதைகூறுபவர்:** லூக்கா 1:26-38 ல் இருந்து வாசிக்கவும் அல்லது பாராமல் கூறவும். பின் கூறவேண்டியது, "காபிரியேல் தூதன் கூறுவதைக் கேளுங்கள்."

**காபிரியேல்:** (சத்தமாகப் பேசவும்) "மரியாளே, வாழ்க! பயப்படாதே! உனக்கு ஒரு குழந்தை பிறக்கும்! அவரே இயேசு! உன்னதமானவரின் குமாரன்! அவர் இராஜாவாக இருப்பார்."

**மரியாள்** : "ஆனால் எனக்குத் திருமணம் ஆகவில்லை."

**காபிரியேல்:** "தேவன் உனக்குக் குழந்தையை அருளுவார்."

**மரியாள்** : "நான் தேவனின் வேலைக்காரி. நீர் சொல்லுகிறபடி நான் நடப்பேன்."

### பகுதி 2 (மரியாள், யோசேப்பு, ஆயர்கள், சத்திரக்காரன், ஆடுமாடுகள்)

**கதைகூறுபவர்:** லூக். 2:1-7 லிருந்து வாசிக்கவும் அல்லது மனப்பாடமாகக் கூறவும். பின் கூறவேண்டியது, "யோசேப்பு கூறுவதைக் கேளுங்கள்."

**யோசேப்பு:** "மரியாளே! நாம் பெயரை பதிவு செய்ய பெத்லகேம் போக வேண்டும்! ராயன், குடிமதிப்பு எழுத உத்தரவு இட்டுள்ளார்."

**மரியாள்** : "ஆனால் குழந்தை எப்போது வேண்டுமானாலும் பிறக்கலாமே..."

**யோசேப்பு:** (மரியாளை கரம் பிடித்து அழைத்துச் செல்லுதல்).

**மரியாள்** : "சீக்கிரம்.... எனக்கு மிகவும் வலியாக உள்ளது... அதோ ஒரு சத்திரம்!"

**யோசேப்பு:** (சத்திரகாப்பாளன் நிற்கும் இடத்திற்கு சென்று தட்டுவது போல் நடித்தல்) லொட்.. லொட்.. லொட்.. (சத்தமாக) "ஐயா... ஓர் அறை கிடைக்குமா?"

**சத்திரக்காரன்:** "இல்லை.. மாட்டுத் தொழுவத்தில் மட்டுமே இடம் உள்ளது."

**யோசேப்பு:** (கைத்தாங்கலாக மரியாளை முன்னணை நோக்கி அழைத்துச் செல்லல்).

**மாடுகள்** : (கையும் முழுங்காலும் ஊன்றி மரியாளை சுற்றி நடந்து மாடுகளைப் போல கத்துதல்)

**மரியாள்** : (பொம்மையை துணியில் சுற்றி பெட்டியில் கிடத்தி) "குழந்தை இயேசு பிறந்தாயிற்று!"

## மூன்றாம் பகுதி (ஆட்டிடையர்களும் ஆடுகளும்)

**கதைகூறுபவர்:** லூக்கா 2:8-20 லிருந்து வாசித்து (அல்லது மனப்பாடமாக சொல்லி) பின் கூறவேண்டியது, "ஆட்டிடையர்கள் கூறுவதைக் கேளுங்கள்!"

**மூன்று இடையர்கள் கூறுவது:** "இன்றிரவு மிகவும் குளிர்!" "நட்சத்திரங்கள் மின்னுகின்றன!" "ஆடுகள் திருப்தியாக சாப்பிட்டன!"

**ஆடுகள்** : இடையர்களைச் சுற்றி கையும் முழுங்காலும் ஊன்றி நடந்து, ஆடுகளைப் போல கத்துதல்.

**தேவதூதர்களும் இடையர்களும்:** தூதர்கள் தோன்றுதல். இடையர்கள் பயந்து தரையில் விழுதல்.

**தேவதூதர்கள்:** "இடையர்களே! பயப்பட வேண்டாம். நாங்கள் உங்களுக்கு நற்செய்தியைக் கொண்டு வந்திருக்கிறோம். ஒரு குமாரன் பிறந்திருக்கிறார். அவரே கிறிஸ்து. கர்த்தர். பிள்ளையைத் துணியிலே சுற்றி பெத்லகேமில் உள்ள ஒரு முன்னணையில் கிடத்தி இருக்கக் காண்பீர்கள்."

**இடையர்களின் தலைவன்:** "வாருங்கள், வேகமாய்ப் போவோம்!"

**இடையர்கள்:** (இயேசு இருக்கும் இடத்தை நோக்கி ஓடி, முழுங்காலிட்டு பெட்டிக்குள் நோக்கி, சில வினாடிகள் கழித்து எழுதல்).

**இடையர்களின் தலைவன்:** "தேவனைத் துதிப்போம். அவரால் அபிஷேகம் பெற்ற கிறிஸ்து பிறந்து விட்டார். கர்த்தர் நம்மோடு இருக்கிறார்."

**கதை கூறுபவர்:** நாடகம் முடிந்த உடன் எல்லோருக்கும் நன்றி கூறுதல்.

**கேள்விகள்:** செயல்பாடு 2 ல் பட்டியல் இடப்பட்டுள்ள கேள்விகளைப் பிள்ளைகள் பெரியவர்களிடம் கேட்கவும்.

**மனனவசனம்.** லூக். 2:14.

**கவிதை:** லூக் 1:46-55ல் உள்ள மரியாளின் ஜெபத்தை மூன்று சிறுவர்கள் ஒப்புவிக்கட்டும். நீங்கள் சொல்லச் சொல்ல குழந்தைகள் சொல்லட்டும்.

"உன்னதத்தில் இருக்கும் தேவனுக்கு மகிமை உண்டாவதாக"

"உமது குமாரனை எங்களுக்குத் தந்ததால் நாங்கள் உம்மைத் துதிக்கிறோம்."

"நீர் உமது மகனுக்கு பணம் நிறைந்த ஒர் இடத்தைத் தரவில்லை"

"நீர் அவரை ஏழைகளிடமும் உதவி அற்றவர்களிடமும் அனுப்பினீர்."

"எல்லா தீமைகளில் இருந்தும் வேதனைகளில் இருந்தும் எங்களை விடுவிக்க நீர் அவரை அனுப்பினீர்"

"தூதர்களையும் இடையர்களையும் போல நாங்களும் சந்தோஷமாக அவரது பிறப்பை கொண்டாடுகிறோம்."

"இயேசுவின் நாமத்தினால், ஆமென்"

Copyright 2004 © by Paul-Timothy. May be freely copied. Download from www.Paul-Timothy.net